# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 - 2012

# வளர் தமிழ் 10

சுட்டெண்:.......................................................... நேரம்: 180 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. கழக இலக்கியங்களாக எமக்குக் கிடைத்த நூல்கள் எக் கழகத்திற்குரியவை?
   அ) முதற்கழகம் ஆ) இடைக்கழகம் இ) கடைக்கழகம் ஈ) நடுக்கழகம்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. அகம் என்ற சொல் குறித்து நிற்பது
   அ) காதலை ஆ) வீரத்தை இ) போரை ஈ) பக்தியை
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. பின்வருவனவற்றுள் அறநூல்
   அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) நாலடியார் இ) முல்லைப்பாட்டு ஈ) பட்டினப்பாலை
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கண்ணகிக்கு சிலை எடுக்கக் கல் எடுக்கப்பட்ட இடம்
   அ) குமரிமுனை ஆ) இமயம் இ) பொதிகைமலை ஈ) திருவதிகை
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இந்தியாவின் முன்னைய பெயர்
   அ) நாவலந்தீவு ஆ) காரைதீவு இ) கச்சதீவு ஈ) குமரிக்கண்டம்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. 'தண்டலை மயில்கள் ஆட ...... எனத் தொடங்கும் பாடலில் இடம்பெறும் நிலம்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. 'காலையிளம் பரிதி' இதில் பரிதி எனக் குறிப்பிடப்படுவது

அ) நிலா ஆ) வானம் இ) கதிரவன் ஈ) விண்மீன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றில் செயப்படுபொருள் குன்றிய வினை

அ) நட ஆ) உண் இ) படி ஈ) வரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. சார்பெழுத்து அல்லாதது

அ) க ஆ) இ இ) த ஈ) பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பாணன் எனப்படுபவன்

அ) இசைக்குல ஆண் ஆ) கூத்தன் இ) நடிகன் ஈ) கோமாளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஒருவரின் கூற்றைக் குறிப்பிடும் பொழுது பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறி

அ) வினாக்குறி ஆ) வியப்புக்குறி இ) அரைப்புள்ளி ஈ) இரட்டை மேற்கோட்குறி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இயற்கைத்தாய் என்ற பாடலைப் பாடியவர்

அ) கம்பர் ஆ) பாவலர் முடியரசன் இ) இளங்கோ ஈ) கனக சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் குற்றியலுகர எழுத்து

அ) மு ஆ) டி இ) கு ஈ) நு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் அடைமொழி

அ) அவன் ஆ) இனிய இ) உண்டான் ஈ) ஓடினான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. சொல்லிய உறுப்புக்கள்

அ) ஐந்து ஆ) மூன்று இ) இரண்டு ஈ) நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. சேரன் செங்குட்டுவனுக்கு கண்ணகியின் கதையைக் கூறிய புலவர்

அ) கம்பர் ஆ) சீர்த்தலைச் சாத்தனார் இ) தண்டமிழ்ச் சாத்தனார் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கணிகன் என்ற சொல் குறித்து நிற்பது

அ) சோதிடனை　　ஆ) வணிகனை　　இ) உழவனை　　ஈ) பாடகனை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

18. கவிஞர் காசிஆனந்தனின் ஊர்

அ) யாழ்ப்பாணம்　　ஆ) மட்டக்களப்பு　　இ) திருகோணமலை　　ஈ) முல்லைத்தீவு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

19. 'யாக்கை பெரிதோ தமிழ் பெரிதோடா' என்ற வரியில் யாக்கை எனக் குறிப்பிடப்படுவது

அ) உடல்　　ஆ) மனம்　　இ) உயிர்　　ஈ) குருதி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

20. பெயர்ச்சொல்

அ) நான்குவகை　　ஆ) மூன்றுவகை　　இ) ஆறுவகை　　ஈ) ஐந்துவகை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

21. கருமை என்பது

அ) இடப் பெயர்　　ஆ) சினைப் பெயர்　　இ) குணப் பெயர்　　ஈ) பொருட் பெயர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

22. இலெமூரியா என அழைக்கப்பட்டது

அ) ஆசியக் கண்டம்　　இ) அரேபியக் கண்டம்

ஆ) குமரிக்கண்டம்　　ஈ) ஆபிரிக்கக் கண்டம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் இடுகுறிப்பெயர்

அ) நிலம்　　ஆ) நாற்காலி　　இ) முள்ளி　　ஈ) மண்வெட்டி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. குமரிக்கண்ட வரலாறு பற்றிக் கூறும் நூல்களில் ஒன்று

அ) நாலடியார்　　ஆ) கலித்தொகை　　இ) வளையாபதி　　ஈ) திருக்குறள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

25. அச்சமின்றி ஆடிப்பாட எது வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

அ) வீடு　　ஆ) போர்　　இ) விடுதலை　　ஈ) பணம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

26. வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?

அ) பணக்காரர்　　ஆ) கவிஞர்　　இ) மாபெரும் வீரர்　　ஈ) அரசியல்வாதி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

27. முகவுரை, முடிவுரை என்பன இடம்பெறுவது

அ) பாடலில்  ஆ) கவிதையில்  இ) கட்டுரையில்  ஈ) இசையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இலங்கைத்தீவு ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்ட ஆண்டு

அ) 1972  ஆ) 1948  இ) 1933  ஈ) 1915

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இந்தியாவில் நுழைந்து வடபுலத்தைத் தம்வயப்படுத்தியவர்

அ) சிங்களவர்  ஆ) ஆரியர்  இ) ஆங்கிலேயர்  ஈ) ஐரோப்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. வந்து என்பது

அ) வினையெச்சம்  ஆ) வினையடி  இ) வினைமுற்று  ஈ) பெயரெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. குற்றியலுகர எழுத்துகள் எவை?

______________________________

______________________________

2. சொல்லிய உறுப்புக்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

______________________________

______________________________

3. செப்புச் சொல்லியம், வினாச் சொல்லியம் (செப்பு வாக்கியம், வினா வாக்கியம்) இரண்டிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

4. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

1. விறலியர் ______________ 4. கழல் ______________

2. எழினி ______________ 5. வஞ்சினம் ______________

3. ஆடவர் ______________

5. கரணியப் (காரணப்) பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக.

______________________________

______________________________

______________________________

______________________________

(புள்ளிகள் 15)

## 3) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

மடிந்தான் உன்மகன் களத்தில் - என்றான்
மனம் ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை
களமும் அதுதான் காயம் மார்பிலா முதுகிலா
கழறுவாய் என்றாள் முதுகில் என்றான்
கிழவி துடித்தனள் இதயம் வெடித்தனள்
வாளை எடுத்தனள் முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினாள் வேகம் கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும் மோழைக்குப் பெயர் போர் வீரனா?
முன்பொருநாள் பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச் சாய்ந்து கிடந்த என் சாகாத கண்ணாளன்
அவருக்குப் பிறந்தானா?
அப்பா மானமெங்கே இல்லை இல்லை
என் மகனுக்குக் காயம மார்பில்தான்
மானங்காத்தாய் என் வீர மகனே!

1. தாய்க்கிழவி ஏன் துடித்தாள்?

______________________________

______________________________

2. இவ் வீரத்தாய் கையிலே எதனை எடுத்தாள்?

______________________________

______________________________

3. இத் தாயின் மகன் எவ்வாறு இறந்தான்?

______________________________

______________________________

4. சாய்ந்து கிடந்த என் சாகாத கண்ணாளன் என்று யாரை குறிப்பிடுகின்றாள்?

______________________________

______________________________

5. மானங்காத்தாய் என் வீரமகனே! என்று ஏன் கூறினாள்?

______________________________

(புள்ளிகள் 10)

______________________________

## 4) தரப்பட்டுள்ள பாடநூல் வினா ஐந்திற்கும் விடைதருக.

1. எதற்காகச் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுக்கச் சென்றான்?

2. நேற்றுத் தமிழர் எவ்வாறு வாழ்ந்ததாகக் கவிஞர் காசிஆனந்தன் குறிப்பிடுகிறார்?

3. மாந்தன் (மனிதன்) எவ்வாறு வாழவேண்டுமென கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்?

4. புலப்பெயர்வு என்றால் என்ன?

5. இயற்கை இன்பம் என்ற பாடப் பகுதியில் உமக்குப் பிடித்த காட்சி எது? ஏன்?

(புள்ளிகள் 15)

## 5) பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

சோழ வளநாட்டின் செந்தமிழ்ப்புலவர் பெருஞ்சித்திரனார். அவர் தன் வறுமையைத் தீர்க்க குமண மன்னனை நாடிவருகின்றார். புலவரைக் கண்ட குமண மன்னன் ஓடிச்சென்று புலவரை அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றான். புலவரோ மன்னனைப் பார்த்து, ''வாழி மன்னா! வாழி! தங்குதடையின்றித் தமிழ் வளர்க்கும் கொங்குப்பகுதியின் தார் வேந்தே! நீ ஏந்திய கூர்வாளோ படைஒடுக்கும். உன் செங்கோலோ அறம் வளர்க்கும். உன் வெண்கொற்றக் குடையோ அண்டினோர்க்கு வாழ்வளிக்கும். நாடி வந்து இரப்போருக்கு ஓடிச் சென்று உதவும் வள்ளலே! நலிந்த இப் புலவனின் நல்குரவை நீக்க வேண்டும் என்றார்.
''நற்றமிழ்ப் புலவரே! தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுமையா''? என்றான் மன்னன். உடல்வற்றி உருக்குலைந்து போனாள் என் மனைவி. ஆடிப்பாடி மகிழும் என் மகள் அழக்கூடச் சக்தியற்று இருக்கின்றாள். பசியால் அழுகின்றது பச்சிளங் குழந்தை. அவளோ பாலில்லாததால் பால்நிலாவைக் காட்டித் தானும் அழுகின்றாள். குமண மன்னன் மிகவும் வேதனைப்பட்டான். தமிழ்ப் புலவர்களின் வாழ்வை அழித்து வரும் வறுமையே! இனி இக்குமணனின் உயிர் உள்ளவரை புலவர்களின் வாழ்க்கையைச் சீரழிக்க உன்னை அனுமதிக்க மாட்டேன் எனக் கூறிப் புலவருக்குப் பொன்னையும் பொருளையும் பொதிபொதியாய்க் கட்டிக் களிற்றின் மீது ஏற்றி அனுப்பி வைத்தான். புலவரோ ''பூவுலகில் புதுமைகள் படைக்கும் தலைவா! குவலயம் உள்ள வரை உன் குலம் தழைக்கட்டும். நின் புகழ் நிலைக்கட்டும்'' என்று வாழ்த்தினார்.
புலவர் தான் கொண்டுசென்ற பொருளை நாம் மட்டும் துய்க்கலாகாது எனத் தன் மனைவிக்குக் கூறினார். மனைவியும் பெற்ற செல்வத்தின் பெரும் பயன் ஈதலே! எனக்கூறித் தமக்கு நன்மை செய்தவர், செய்யாதவர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் பகுத்துக் கொடுத்தனர். தாமும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

1. புலவரும் மனைவியும் அரசனிடமிருந்து பெற்ற செல்வத்தினை என்ன செய்தார்கள்?

_______________________________________________

2. எது அறம் வளர்க்கும் என்று புலவர் கூறினார்?

_______________________________________________

_______________________________________________

3. "நற்றமிழ்ப் புலவரே! தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுமையா?" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

4. தன்னைத் தேடிவந்த புலவருக்குக் குமண வள்ளல் எவற்றைக் கொடுத்தான்?

_______________________________________________

_______________________________________________

5. புலவர் எவ்வாறு அரசனை வாழ்த்தினார்?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள்10 )

**6) கீழ்வரும் அஞ்சலை வாசித்து உமது வாழிடமொழியில் எழுதுக.**

யாழ்ப்பாணம்,
20-11-2011.

அன்பின் மாமா,

நாங்கள் இங்கு இருக்கின்றோம். நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள் என எங்களுக்குத் தெரியாது. கொடிய போரினால் நாங்கள் பிரிந்து விட்டோம். போர் ஒன்றாக வாழ்ந்த எங்கள் உறவுகளைப் பிரித்து விட்டது. மாமா! நீங்கள் எங்களுடன் இருந்த போது நாங்கள் எந்தக் குறையும் இல்லாமல் இருந்தோம்; மகிழ்ச்சியாக இருந்தோம். எல்லோரும் உங்கள் சொல் கேட்டு அமைதியாக இருந்தோம். இப்போது எவரும் அம்மாவின் சொல் கேட்பதில்லை. அம்மா சொல்லுவார், '' உங்கள் மாமா திரும்பி வந்தால்தான் நீங்கள் குழப்படி செய்ய மாட்டீர்கள்'' என்று. உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் மாமா!

அன்புடன்,
மருமகள்
தமிழினி

(புள்ளிகள் 05)

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை** எழுதுக.

**1.** சேரமான் வஞ்சினம் என்ற பாடத்தினை உமது உரைநடையில் கதையாக எழுதுக.

2. தமிழர் புலப் பெயர்வு

**3.** தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கங்கள். (நன்மை, தீமை)

(புள்ளிகள் 15)